சுருக்கம்

பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005 – பொழுதுபோக்கு பூங்காக்கள் (Entertainment/ Amusement Parks) மற்றும் அதை போன்ற இடங்கள் 10.11.2020 முதல் செயல்பட அனுமதி – நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே. 4)த் துறை

அரசாணை (நிலை) எண்.634

நாள்:12.11.2020
சார்வரி, ஐப்பசி 27
திருவள்ளுவர் ஆண்டு – 2051
படிக்க:-

1. தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், இந்திய அரசு அறிவிப்பு நாள்: 6.10.2020
2. அரசாணை (நிலை) எண்.613, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே. IV)த் துறை, நாள் 30.10.2020
3. கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண். O.C.I/563/2020, நாள் 3.11.2020

•••••••

ஆணை:

கோவிட்–19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் பல்வேறு தளர்வுகளுடன் ஊரடங்கு 30.11.2020 வரை நீட்டிப்பு செய்து இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளன. மேலும், அரசால் வெளியிடப்படும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பொழுதுபோக்கு பூங்காக்கள் (Entertainment /Amusement Parks) மற்றும் அதை போன்ற இடங்கள் 10.11.2020 முதல் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளன.

2. மேற்கண்ட ஆணையினை தொடர்ந்து பொழுதுபோக்கு பூங்காக்கள் (Entertainment /Amusement Parks) மற்றும் அதை போன்ற இடங்கள் 10.11.2020 முதல் செயல்படுவது தொடர்பாக கோவிட்–19 நோய்தொற்று பரவலை தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) இணைப்பில் உள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

க.சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சென்னை 600 005
கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, சென்னை 09

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர், வருவாய்மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை 9
முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச்செயலாளர் அலுவலகம், சென்னை 9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

12/11/2020

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## தமிழ்நாட்டில் பொழுதுப்போக்கு பூங்காக்கள் மற்றும் அதை போன்ற இடங்களில் கொரோனா நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்த பின்பற்ற வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

### 1. பின்னணி

இந்தியாவில் கொரோனா நோய்த் தொற்றைக் கருத்தில் கொண்டு பொழுதுப் போக்கு பூங்காக்களின் செயல்பாடுகளில் ஈடுப்பட்டுள்ள பல்வேறு பங்குதாரர்கள் பூங்காக்களை நடத்தும் போது கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### 2. நோக்கம்

இந்த நிலையான வழிக்காட்டு நடைமுறைகளில் பொதுவான நோய்த் தொற்று நடவடிக்கை குறித்து விவரிக்கப்பட்டுள்ளதோடு பொழுதுபோக்கு பூங்காக்களில் கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பான தடுப்பு நடவடிக்கை குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள பொழுதுபோக்கு பூங்காக்கள் செயல்பட அனுமதியில்லை.** மத்திய அரசின், உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகங்களின் வழிக்காட்டுதலைப் பின்பற்றி அனைத்து பூங்காக்களையும் திறந்து நடத்த அனுமதிக்கப்படும்.

### 3. பொழுதுபோக்கு பூங்காக்களில் பின்பற்ற வேண்டிய பொதுவான வழிக்காட்டு நடைமுறைகள்.

பொழுதுபோக்கு பூங்காக்களில் நோய்த் தொற்று பரவும் ஆபத்தினை குறைக்க கீழ்க்கண்ட எளிய பொது சுகாதார நடவடிக்கைகளை அங்கு பணி புரியும் ஊழியர்கள் மற்றும் பார்வையாளர்கள் உட்பட அனைவரும் தவறாது பின்பற்றப்படவேண்டும்.

i. பொழுதுபோக்கு பூங்காக்களின் நுழைவாயிலில், பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் தெர்மல் ஸ்கேனர் மூலம் காய்ச்சல் பரிசோதனை செய்ய வேண்டும். கொரோனா நோய் அறிகுறியற்ற நபர்கள் மட்டுமே பொழுதுபோக்கு பூங்காக்களில் அனுமதிக்கப்படுவார்கள்

ii. பொழுதுபோக்கு பூங்காக்களில், இயன்றவரை ஒருவொருக்கும் மற்றவருக்கும் இடையே குறைந்தபட்சம் 6 அடி இடைவெளியை பின்பற்ற வேண்டும்.

iii. பொழுதுபோக்கு பூங்காக்களில், முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

iv. கைகள் அழுக்காக இல்லாவிட்டாலும் கூட, அடிக்கடி சோப்பு கொண்டு (குறைந்தது 40–60 விநாடிகள்) கைகளை கழுவ வேண்டும். மேலும், ஆல்கஹால் கொண்ட கை சுத்திகரிப்பானைக் கொண்டும் (குறைந்தது 20 விநாடிகள்) கைகளை சுத்தம் செய்யலாம்.

v. பொது மக்கள் சுவாசம் சார்ந்த நெறிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். இருமும் போதும், தும்பும் போதும், வாய் மற்றும் மூக்கை, திசு பேப்பர் / கைக்குட்டை/ முழங்கை கொண்டு கட்டாயம் மூடுவதோடு, பயன்படுத்தப்பட்ட திசு பேப்பர்களை

முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

vi. அனைவரும் தங்களது உடல்நலத்தை சுயமாக கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், தங்களுக்கு ஏற்படும் உடல்நலக் குறைபாடு தொடர்பாக மாநில மற்றும் மாவட்ட உதவி எண்களை உடனடியாக தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.

vii. பொது இடங்களில் எச்சில் துப்புவது கண்டிப்பாக தடை செய்யப்பட வேண்டும்.

viii. ஆரோக்கிய சேது செயலியினை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த அறிவுறுத்தப்படுகிறது.

**4. நோய் தொற்றின் காரணமாக அதிகம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களை பாதுகாக்க கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

i. பொழுதுபோக்கு பூங்காக்களில் 65 வயதிற்கு மேலானவர்களையும், கர்ப்பிணி பெண்களையும் 10 வயதிற்கு கீழான குழந்தைகளையும் இதர நோய் உள்ளோரையும் வீட்டிலிருக்க அறிவுறுத்த வேண்டும். பொழுதுபோக்கு பூங்காக்களுக்கு வருகை புரியும் பொதுமக்களுக்கு, பூங்கா நிருவாகம் இது குறித்து அறிவுறுத்த வேண்டும்.

ii. கொரோனா நோய்த் தொற்றின் அபாயம் அதிகம் உள்ள பணியாளர்கள், அதாவது வயது முதிர்ந்தவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பிற நோயால் பாதிக்கப்பட்ட பணியாளர்கள் கூடுதலாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களுடன் நேரடி தொடர்பு தேவைப்படும் எந்தவொரு பணியிலும் மேற்சொன்ன நபர்களை ஈடுபடுத்தக்கூடாது.

**5. பொழுதுப்போக்கு பூங்காக்களை சுத்தம் மற்றும் சுகாதாரத்துடன் பராமரிக்க பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்**

i. பொழுதுபோக்கு பூங்காக்கள் துவங்குவதற்கு முன்னர், பொழுதுப்போக்கு பூங்காக்களில் உள்ள பணி இடங்களிலும் பொது பயன்பாட்டு பகுதிகளிலும் திறந்த வெளியிலும், விளையாடும் இடங்கள், (places of rides) அருங்காட்சியகம், தோட்டம், உணவகம், பரிசுப்பொருட்கள் விற்பனையகம் மற்றும் திரையரங்குகள் உட்பட அனைத்து இடங்களையும் ஒரு சதவீதம் சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் கொண்டு தினந்தோறும் சுத்தப்படுத்தப்பட வேண்டும். இதற்கான வழிமுறைகள் கீழ்கண்ட இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. https://www.mohfw.gov.in/pdf/Guidelinesondisinfectionofcommonpublicplacesincludingoffices.pdf.

ii. மேலும் பொதுமக்கள் அடிக்கடி தொடும் கதவின் கைபிடிகள், படிக்கட்டுகள், மேஜை, நாற்காலி மற்றும் உணவகங்கள், கழிவறைகள் சுவர் மற்றும் தரைப்பகுதி ஆகிய இடங்களையும் மேற்சொன்ன கிருமிநாசினி கொண்டு அடிக்கடி சுத்தம் செய்வதுடன் ஒவ்வொரு நாளும் பொழுதுபோக்கு பூங்கா திறப்பதற்கு முன்னரும், மூடும் போதும் முறையாக கிருமிநாசினிகள் கொண்டு சுத்தப்படுத்தப்பட வேண்டும்.

iii. மேலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பல இடங்களில் கைகழுவும் நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பான் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட வேண்டும். கழிவறைகள் மற்றும் இதர பொது இடங்களிலும் சோப்பு மற்றும் கை சுத்திகரிப்பான்கள் போதுமான அளவு வைக்கப்பட வேண்டும்.

iv. பொதுமக்கள் குடிநீர் அருந்தும் இடங்கள், கழிவறைகள், கை கழுவும் இடம் மற்றும் குளியலறை போன்ற அனைத்து இடங்களும் முறையாக சுத்தம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

v. பொழுதுபோக்கு பூங்காவிற்கு வருகை புரிபவர்கள், பணியாளர்கள் தாங்கள் பயன்படுத்திய முகக்கவசங்களை, பொது இடங்களில் வைக்கப்படும் மூடப்பட்ட குப்பைத் தொட்டிகளில் போடுவதை உறுதி செய்ய வேண்டும்.

vi. பொழுதுபோக்கு பூங்காக்களில் தூய்மை / சுகாதாரப் பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை குறித்த விவரம் தெரிவிப்பதோடு அவர்களுக்கு உரிய பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும்.

vii. தூய்மைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, தூய்மைப் பணியாளர்களுக்கு கையுறைகள், காலணிகள், முகக் கவசங்கள், தனி நபர் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

viii. பொழுதுபோக்கு பூங்காக்களில் உள்ள நீச்சல் குளங்கள் திறக்கப்படக்கூடாது.

ix. மேலும் பொழுதுபோக்கு பூங்காக்களில் தண்ணீரைப் பயன்படுத்தி நடைபெறும் விளையாட்டுக்களுக்கான (water rides) இடங்களில் உள்ள தண்ணீரை சுத்தம் செய்வதுடன், குளோரின் கொண்டு சுத்தம் செய்வது தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

x. தண்ணீரைப் பயன்படுத்தி நடைபெறும் விளையாட்டுக்களுக்கான (water rides) இடங்களில் போதுமான சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் வண்ணம் நீர் விளையாட்டுக்களின் (water rides) கால நேரம் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

xi. பொழுதுப்போக்கு பூங்காக்களில் உள்ள திரையரங்குகளில் உள்ள மொத்த இருக்கைகளில் 50 விழுக்காடு இருக்கைகளின் மட்டும் பொதுமக்கள் அமர்ந்து திரைப்படம் பார்க்க அனுமதிக்கப்படும்.

xii. பொழுதுபோக்கு பூங்காவில் உள்ள திரையரங்குகளில், பொது மக்கள், வரிசையாக உள்ளே செல்வதையும், வெளியேறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு ஒவ்வொரு திரைப்படக் காட்சிக்கும் இடையே போதுமான கால இடைவெளி இருக்க வேண்டும். திரையரங்கிலிருந்து வெளியில் வரும் போது பொதுமக்கள் கூட்டமாக வெளியே வருவதைத் தவிர்க்கும் பொருட்டு சமூக இடைவெளியை கடைப்பிடித்து வரிசை வாரியாக வெளியில் வருவதை உறுதி செய்ய வேண்டும்.

xiii. பொழுதுப்போக்கு பூங்காக்களில் பெரிய அளவிலான கூட்டடங்கள், இசை மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்த அனுமதி இல்லை.

**6. பொழுதுபோக்கு பூங்காவின் செயல்பாடு, கால அட்டவணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பது தொடர்பாக திட்டமிடல்**

- <u>சமூக இடைவெளி</u>

i. பொழுதுபோக்கு பூங்கா வளாகம் மற்றும் பொழுதுபோக்கு பூங்காவிற்குள், பொது மக்கள் நுழையும் போதும், வெளியே வரும் போதும், சமூக இடைவெளியினை கடைப்பிடித்து வரிசையில் நிற்கும் வகையில் தரையில் குறியீடுகள் போடப்பட வேண்டும்.

ii. பொழுதுபோக்கு பூங்கா வளாகத்தின் உள்ளே மற்றும் வெளியே உள்ள இடங்களில், பொதுமக்கள் வரிசையாக நிற்பதை உறுதி செய்ய வேண்டும். சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் பொருட்டு, பொழுதுபோக்கு பூங்கா நிருவாகம் போதுமான நபர்களை நியமிக்க வேண்டும்.
iii. பணியாளர்களுக்கும், பார்வையாளர்களுக்குமான பாதுகாப்பு வைப்பறைகள் பயன்பாட்டில் தொடர்ந்து இருக்கும். எனினும், பாதுகாப்பு வைப்பறைகள் அடிக்கடி கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- **கூட்ட மேலாண்மை**

i. பொழுதுபோக்கு பூங்காக்களில் பொதுமக்களின் கூட்டம் வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் அதிக அளவில் இருக்கும் என்பதால், கூட்ட நெறிசலைத் தவிர்க்கவும், சமூக இடைவெளி கடைப்பிடிக்கவும் முன்கூட்டியே திட்டமிடப்பட வேண்டும்.
ii. இயன்றவரை இணைய வழியாக அனுமதி சீட்டு பதிவு செய்வதையும் / வழங்குவதையும் ஊக்குவிக்க வேண்டும்.
iii. சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் நோக்குடன் பொழுதுபோக்கு பூங்கா வளாகத்தின் மொத்த பரப்பளவைக் கணக்கில் கொண்டு அனுமதி சீட்டுகள் வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ப பொழுதுப்போக்கு பூங்காவினுள் அனுமதி வரையறுக்கப்பட வேண்டும்.
iv. பொழுதுபோக்கு பூங்காவில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக பார்வையாளர்களை அனுமதிக்கக் கூடாது.
v. மேலும் பொழுதுபோக்கு பூங்காவில் உள்ள விளையாடும் இடங்கள் (places of rides) மற்றும் உணவகங்களில் (Restaurants) கூட்ட நெரிசலைக் கண்காணித்து அவற்றைத் தடுக்கும் பொருட்டு CCTV கேமாராக்கள் நிறுவப்பட வேண்டும்.
vi. பொழுதுபோக்கு பூங்காக்களில் போதுமான எண்ணிக்கையிலான அனுமதி சீட்டு வழங்கும் கவுண்டர்கள் சமூக இடைவெளியுடன் அமைக்கப்பட வேண்டும்.
vii. மேலும் அனுமதிச்சீட்டு வழங்கும் போது கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள செய்ய வேண்டியவை / செய்யக் கூடாதவை அடங்கிய பொதுவான அறிவுரைகள் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்படுவதுடன் அனுமதிச்சீட்டின் பின்புறம் அவை அச்சிடப்பட்டிருக்க வேண்டும். பூங்காவின் முக்கிய இடங்களில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள செய்ய வேண்டியவை / செய்யக் கூடாதவை உள்ளடக்கிய விளம்பரப் பதாகைகள் வைக்கப்பட வேண்டும்.
viii. பொழுதுபோக்கு பூங்காக்களின் நிருவாகம் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் கட்டணம் செலுத்தும் முறையினை (contact-less payment) நடைமுறைப்படுத்த வேண்டும்.

- **பொழுதுபோக்கு பூங்காவிற்குள் காற்றோட்டத்தை உறுதி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

i. பொழுதுபோக்கு பூங்காவில் இயன்றவரை இயற்கை காற்றோட்டம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். சிறிய / மூடிய இடங்கள் பயன்படுத்தப்படுவதை தவிர்க்க வேண்டும்.

ii. பூங்காவின் கட்டட கதவுகள் மற்றும் ஜன்னல்கள் திறந்திருப்பதன் மூலமும், மின விசிறியை பயன்படுத்துவதன் மூலமும் வெளிக்காற்றோட்டத்தை அதிகப்படுத்த வேண்டும்.

iii. குளிர் சாதனங்கள் பயன்படுத்துவது / காற்றோட்டம் குறித்து மத்திய அரசின் பொதுப்பணித் துறையின் வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, (1) குளிர் சாதனங்களின் வெப்பநிலை அமைப்பு 24–30 டிகிரி செல்சியஸ் வரம்பில் இருப்பதோடு, (2) ஈரப்பதம் 40–70 விழுக்காடு வரையிலும், (3) இயன்றவரை காற்று மறுசுழற்சி செய்யப்படுவதை தவிர்த்தும், (4) இயன்றவரை சுத்தமான காற்றை உள்ளிழுக்கும் வகையிலும், (5) போதுமான காற்றோட்ட வசதியுடன் இருக்க வேண்டும். மேலும், குளிர்சாதன இயந்திரங்களை இயக்குவதற்கு முன்னர் அவைகளை சுத்தம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

- கொரோனா நோய் தடுப்பிற்கு இருப்பில் இருக்க வேண்டியவை

i. பொழுதுபோக்கு பூங்காக்களில் உள்ள பணியாளர்களை நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க தேவையான முகக்கவசங்கள், கிருமிநாசினி, சுத்திகரிப்பான்கள் தேவைக்கேற்ப இருப்பில் இருக்க வேண்டும்.

ii. தேவையான எண்ணிக்கையில் தெர்மல் ஸ்கேனர் (thermal scanner) இருப்பில் வைக்க வேண்டும்.

iii. பொழுதுபோக்கு பூங்காவில் உள்ள குப்பைகள் மற்றும் தேவைப்படாத பொருட்களை அப்புறப்படுத்த மத்திய மாசுக்கட்டுப்பாட்டு துறையின் வழிகாட்டுதலை https:// cpcb.nic.in/ uploads/ Projects/Bio-Medical-Waste/BMW-GUIDELINES-COVID_1.pdf) பின்பற்ற வேண்டும்.

- பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவதற்கான விதிமுறைகள்

i. இணையவழியாக அனுமதிச்சீட்டு முன்பதிவு மேற்கொள்ளும் போது டிஜிட்டல் அனுமதிச்சீட்டுகள் மூலம் நோய்த் தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து பொதுமக்களுக்கு தெரிவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ii. பொழுதுப்போக்கு பூங்காவின் இணையதளம் / முன் பதிவு செயலி மூலம், பொதுமக்களுக்கு கொரோனா நோய்த் தொற்று ஏற்படுவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மற்றும் தங்களது உடல் நலத்தை கண்காணிப்பது தொடர்பாக தெரிவிப்பதுடன், கொரோனா நோய்த் தொற்று இருப்பவர்கள் பூங்காவிற்கு வருகை தர வேண்டாம் என்றும் தெரிவிக்க வேண்டும்.

iii. பொழுதுபோக்கு பூங்கா வளாகத்தின் வெளியிலும், உள்ளேயும், கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த சுவரொட்டிகள் / விளம்பரப் பதாகைகள், பொது மக்கள் கண்ணில் தெரியுமாறு வைக்கப்பட வேண்டும். மேலும், கொரோனா நோயத் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் தற்காப்பு முறைகள் குறித்தும் விழிப்புணர்வைப் பரப்புவதற்காக ஆடியோ மற்றும் வீடியோ கிளிப்புகளை தொடர்ந்து ஒளிபரப்ப வேண்டும்.

iv. மேலும் மாநில உதவி தொலைபேசி எண்கள் மற்றும் உள்ளூர் மருத்துவ அதிகாரிகளின் எண்களை முக்கியமான இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும்.

7. பொழுதுபோக்கு பூங்காவில் சுகாதாரத்தைப் பேணிக்காக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

i. பொழுதுபோக்கு பூங்காவின் நுழைவாயிலில் கை சுத்திகரிப்பான் மற்றும் காய்ச்சல் பரிசோதிக்கும் கருவிகள் நிறுவப்பட வேண்டும்.

ii. பூங்காக்களின் உள்ளே மற்றும் வெளியே செல்வதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

iii. பூங்காவினுள் கொரோனா நோய் தொற்று அல்லாத நபர்களை (பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள்) மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

iv. நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் வசிக்கும் பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்கள் பூங்காவினுள் அனுமதிக்கப்படக்கூடாது.

v. முககவசம் அணிந்த பணியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் மட்டுமே பூங்காவினுள் அனுமதிக்கப்பட வேண்டும். மேலும், பொழுதுபோக்கு பூங்காவின் வளாகத்திற்குள் எப்பொழுதும் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும்.

vi. சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் பொருட்டு, பொழுதுபோக்கு பூங்காவிற்கு உள்ளே செல்வதற்கான வரிசையில் நிற்கும் போதும், விளையாட்டிற்காக (rides) வரிசையில் நிற்கும் போதும், ஒருவருக்கொருவர் இடையே 6 அடி இடைவெளி விட்டு நிற்பதை உறுதி செய்ய வேண்டும்.

vii. அனுமதிச்சீட்டு வழங்கும் இடங்களிலும் வாகனங்கள் நிறுத்தும் இடங்களிலும் படிக்கட்டுகளில் செல்லும் போதும் சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும்

viii. வேலட் பார்க்கிங் (Valet Parking) வசதி இருக்கும் இடங்களில், வேலட் பார்க்கிங் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் கட்டாயமாக முகக் கவசம் மற்றும் கையுறை அணிந்து பணிபுரிய வேண்டும். மேலும், வாகனங்களின் ஸ்டீயரிங், கதவு கைப்பிடிகள், சாவிகள் போன்றவற்றை முறையாக கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

**ix. பொழுதுப்போக்கு பூங்காவின் வளாகத்திற்குள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்**

i. பூங்காக்களில் உள்ள நாற்காலிகள் உட்பட இருக்கைகளுக்கிடையே 6 அடி இடைவெளி இருக்குமாறு அமைக்க வேண்டும்.

ii. பொழுதுபோக்கு பூங்காக்களில் விளையாடும் இடங்களில் (places of rides), கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, விளையாட்டு (rides) நேரங்களின் கால அட்டவணையை மாற்றி அமைக்க வேண்டும்.

iii. சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் நோக்குடன் பொழுதுபோக்கு வளாகங்களில் உள்ள மின்னுயர்த்திகளில் (lift) குறைந்த அளவிலான நபர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும்.

iv. எஸ்கலேட்டரில் (escalator) ஒரு படிகெட்டில் ஒருவர் மட்டும் பயணிப்பதையும், ஒருவருக்கும் மற்றவருக்கும் இடைவெளி இருக்கும் பொருட்டு, ஒருவொருக்கொருவர் ஒரு படிகெட்டு இடைவெளி விட்டு நிற்பதை ஊக்குவிக்க வேண்டும்.

**விளையாட்டுகளின் (rides) போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

i. விளையாட்டைத் **(rides)** தொடங்குவதற்கு முன்னர், பொதுமக்கள் அடிக்கடி தொடும் விளையாட்டு உபகரணங்களின் மேற்பரப்புகளை கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

ii. பார்வையாளர்கள் விளையாடும் இடத்திற்கு **(places of rides)** செல்லும் முன்னரும், விளையாடி முடித்த பின்னரும் தங்களது கைகளை கை சுத்திகரிப்பான் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இதற்கான வசதிகளை பூங்கா நிருவாகம் மேற்கொள்ள வேண்டும்.

iii. விளையாட்டின் **(rides)** போது பார்வையாளர்களுக்கிடையே சமூக இடைவெளி இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**பொழுதுபோக்கு பூங்காவில் உள்ள கடைகள், சிற்றுண்டிசாலை, உணவகங்கள், உடை மாற்றும் இடங்கள் மற்றும் குளியலறைகளில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்**

i. கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதோடு, வரிசையினையும் முறைப்படுத்த வேண்டும்.

ii. பொழுது போக்கு பூங்காக்களில் அமைந்துள்ள உணவகங்களில் (food courts and restaurants) சமூக இடைவெளியை கடைபிடிக்கும் நோக்கத்துடன், உணவகங்களில் உள்ள மொத்த இருக்கைகளில், 50 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்க வேண்டும்.

iii. சமூக இடைவெளியை கடைப்பிடிக்கும் பொருட்டு, உணவகங்களில் உள்ள மேஜைகளில் “இங்கு சேவை இல்லை” **(No service)** பதாகைகள் வைக்கப்பட வேண்டும்.

iv. உணவகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் முகக்கவசம் மற்றும் கையுறை அணிந்து பணிபுரிவதோடு இதர தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

v. ஒருவொருக்கொருவர் தொடர்பு இல்லாத முறையில் (contact-less) உணவு ஆர்டர் செய்வதையும், டிஜிட்டல் முறையில் கட்டணம் செலுத்துவதையும் ஊக்குவிக்க வேண்டும்.

vi. கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, உணவகங்களில் பல கவுன்ட்டர்கள் அமைக்கப்பட வேண்டும்.

vii. ஒவ்வொரு வாடிக்கையாளரும் உணவு அருந்திவிட்டு சென்றவுடன் மேஜை மற்றும் நாற்காலிகளை சுத்தம் செய்ய வேண்டும்.

viii. உணவகங்களின் சமையலறையில் பணிபுரியும் பணியாளர்கள் பணியிடத்தில் சமூக இடைவெளிக்கான விதிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

ix. உணவகங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பயன்படுத்தும் வகையில் போதுமான அளவு கை சுத்திகரிப்பான்கள் வைக்கப்பட வேண்டும்.

x. சமைப்பதற்கு முன்னர் அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்களை நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

xi. உணவு பரிமாறும் பாத்திரங்களை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தியதற்கு பின்னர் சோப்பு கொண்டு கழுவுவதோடு, முறையாக சுத்தம் (sterilize) செய்ய வேண்டும்.

xii. உணவகங்களில் உள்ள தலைமை சமையலர் உட்பட அனைத்து பணியாளர்களும் மேலங்கி, தலையுறை, கையுறை மற்றும் முகக்கவசம் அணிந்து பணிபுரிய வேண்டும். மீண்டும் பயன்படுத்தக்கூடிய மேலங்கிகளை பயன்படுத்தினால், அவற்றை சலவை செய்து பயன்படுத்த வேண்டும். கையுறைகள் மற்றும் முகக்கவசங்கள் அழுக்கானாலோ

அல்லது கிழிந்துவிட்டாலோ அவற்றை அணியாமல், வேறு புதிய கையுறை மற்றும் முகக்கவசங்களை அணிய வேண்டும். பயன்படுத்தப்பட்ட கையுறை, முகக்கவசம் மற்றும் தலையுறை ஆகியவை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த வேண்டும்.

xiii. சமையலறையின் தரைப்பகுதி மற்றும் அலமாறிகள் உட்பட அனைத்து பகுதிகளையும் அங்கீகரிக்கப்பட்ட கிருமிநாசினிகளைக் கொண்டு அடிக்கடி செய்யப்பட வேண்டும்.

xiv. பொழுதுபோக்கு பூங்கா வளாகத்தில், பணியாளர் எவருக்கேனும் இருமல், சளி அல்லது காய்ச்சல் இருப்பின், அவர்கள் பணி செய்ய அனுமதிக்கப்படாமல், அரசு மருத்துவரை அணுகி, பரிசோதனை மேற்கொண்டு, மருத்துவரின் அறிவுரைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்த வேண்டும். இதனை பொழுதுபோக்கு பூங்காவின் மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

xv. பொழுதுபோக்கு பூங்காக்களின் அனைத்து செயல்பாடுகளின் போதும், கொரோனா வைரஸ் தடுப்பு மேலண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகள், மத்திய அரசின் உள் துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டும்.

8. பொழுதுபோக்கு பூங்கா வளாகத்தில், ஒரு நபருக்கு காய்ச்சல் / இருமல் / தொண்டை புண் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால், தொடர்புடைய பொழுதுபோக்கு பூங்கா நிருவாகம், கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்: –

i. நோயுற்ற நபரை, மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தும் வண்ணம் ஒரு தனி அறை அல்லது தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் தங்க வைக்க வேண்டும்.

ii. தனிமைப்படுத்தப்பட்ட நபரை மருத்துவர் பரிசோதிக்கும் வரை அவருக்கு முகக்கவசம் வழங்க வேண்டும்.

iii. உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனை அல்லது மாநில / மாவட்ட உதவி எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும்.

iv. பின்னர் சுகாதாரத் துறையால் நியமிக்கப்பட்ட மருத்துவர் (மாவட்ட விரைவு ஆயத்த குழுக்கள் (RRT) / சிகிச்சையளிக்கும் மருத்துவர்) அந்த நபருக்குள்ள நோய்த் தொற்றின் அபாயம் குறித்து மதிப்பீடு செய்ததன் அடிப்படையில், அவருக்கு வழங்கப்பட வேண்டிய சிகிச்சை, அவர் தொடர்பில் இருந்த நபர்களை கண்டறிவது, கிருமிநாசினி தெளிப்பதற்கான தேவை ஆகியவை குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

v. அந்த நபருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டால் வளாகம் முழுவதும் கிருமிநாசினிகள் தெளிக்கப்பட வேண்டும்.

க.சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

/உண்மை நகல்/

12/11/2021

பிரிவு அலுவலர்.